[2009 ஜூலை 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

முற்பகல் 9-50

வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

174—

கால்நடை துணை மருந்தகம்

***9998—திரு. அ. சின்னசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பாஸ்மார்பெண்டாவில் கால்நடை துணை மருந்தகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்ட கேள்வி. அரவட்லா ஊராட்சியில், அரவட்லா பகுதியிலேயே கால்நடை கிளை நிலையம் தொடங்கப்பட்டு, அது சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது. அதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

2009 ஜுலை 20]

அவர்களுக்கும் என்னுடைய சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குண்டலப்பள்ளி ஊராட்சி மக்கள், நகரப் பகுதியிலிருந்து 12 கிலோ மீட்டர் தள்ளி, காட்டுப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். குண்டலப்பள்ளி ஊராட்சி, குடிப்பள்ளி, அத்திக்குப்பம், சிவனகிரி, கோக்கலூர், ஐங்கமூர், ரங்கம்பேட்டை, முதுகூர், பர்த்தபாளையம் ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள், 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஏரிக்குப்பம் கால்நடை கிளை நிலையம் சென்று, தங்கள் பகுதியிலே வளர்க்கின்ற 10,000 மாடுகளுக்கும், 5,000 ஆடுகளுக்கும் சிகிச்சை பெறுகின்ற நிலையில் இருக்கின்றார்கள். தங்கள் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டுமானால், தொலைதூரத்திற்குச் செல்லுகின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலேயே ஒரு கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்று குண்டலப்பள்ளி ஊராட்சி மக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகின்றார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, குண்டலப்பள்ளியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ்மார்பெண்டா கிராமம் அமைந்துள்ள பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மேல்பட்டி, ஏரிகுத்தி, கரும்பூர் மற்றும் வடசேரி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், எம்.வி. குப்பம், கதவாளம், உமராபாத், அருங்கல்துருவம் மற்றும் அரவட்லா ஆகிய இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும் அமைந்துள்ளன. அரசு விதிமுறைகளின்படி ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமானால், அப்பகுதியில் குறைந்தது 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும். மேலும், அருகிலுள்ள கால்நடை கிளை நிலையங்களிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். வேலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே அரவட்லா என்ற பகுதியில் இயங்கிவரும் கால்நடை கிளை நிலையமானது, பாஸ்மார்பெண்டா என்ற இடத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. எனவே, பாஸ்மார்பெண்டா பகுதியில் புதிதாகக் கால்நடை கிளை நிலையம்

[2009 ஜூலை 20

அமைக்க வாய்ப்பு இல்லை. பாஸ்மார்பெண்டா மற்றும் அதனைச் சுற்றியுள்ள கொத்தூர் மற்றும் அரவட்லா ஆகிய கிராமங்களில் 4,290 கால்நடைகள் மட்டுமே உள்ளன. மேற்படி கிராமத்தின் அருகில் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சைகளே இதற்குப் போதுமானவையாக உள்ளன. ஆகவே, புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கும் தேவை தற்போது எழவில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கோரியுள்ள குண்டலப்பள்ளி ஊராட்சியிலும், சாத்கர் ஊராட்சியிலும் 10,000 மாடுகளும், 5,000 ஆடுகளும் வளர்க்கப்படுகின்றன. அவர்கள் தங்களுடைய கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டுமானால், 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஏரிகுத்தி கால்நடை கிளை நிலையத்திற்குச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் காட்டுப் பகுதியில் வாழ்கின்றார்கள். நகரப் பகுதியிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காட்டுப் பகுதியில் வாழ்கின்ற காரணத்தினால், தொலைதூரத்திற்குச் சென்று கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். அந்த மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, குண்டலப்பள்ளி ஊராட்சியில், ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருவார்களா எனத் தங்கள்வாயிலாக மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை முன்னுரிமைப் பட்டியலில் வைத்து, எதிர்காலத்திலே கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில், மிகத் தொலைவிலுள்ள கிராமங்களில்கூட கால்நடை மருத்துவமனை வசதி கிடையாது.

2009 ஜூலை 20]

குறைந்தபட்சம் ஒரு நடமாடும் கால்நடை மருத்துவமனையையாவது, அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் தொகுதிக்கு அளிப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியத்திலுள்ள சேரன்குளம், ராமானுஜம்புதூர், வல்லக்குளம், தெற்குகாரசேரி என்ற நான்கு பஞ்சாயத்துகளிலும், 21,000-க்கும் அதிகமான கிராமங்கள் உள்ளன. இங்கு, 10,000 பசு மாடுகளும், 15,000 செம்மறி ஆடுகளும், 20,000-க்கும் அதிகமான வெள்ளாடுகளும், 14,000-க்கும் அதிகமான கோழிகளும் இருக்கின்றன. அவற்றை மருத்துவ வசதிக்காக 13 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கருங்குளத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். ஆகவே, கிராம மக்களின் நலன் கருதி சேரன்குளத்தில் ஒரு கால்நடை துணை மருத்துவமனையினை அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கால்நடை கிளை நிலையங்களில் நிறைய பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தப் பணியிடங்களை எல்லாம் விரைவிலே நிரப்புவதற்காக, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, முயற்சிகளை எடுத்து வருகிறது. அந்த இடங்கள் எல்லாம் நிரப்பப்பட்ட பிறகு, புதியதாகப் பார்வைக் கிளை நிலையங்கள் என்ற ஒரு concept-ஐ இந்த அரசு கொண்டுவரவிருக்கிறது. அங்கு தேவை ஏற்பட்டால், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியின்பேரில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கவனத்திலே கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியத்திலே, நெய்தலூர் என்ற ஊரில் கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. இந்த மருந்தகம் போதிய இட வசதியின்றி மிகவும் நெருக்கடியான இடத்தில் இருக்கின்றது. நெய்தலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள தளிஞ்சி, மேலப்பட்டி, சேப்லாபட்டி, ஆலத்தூர் மற்றும் ஆச்சாம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் உள்ள சுமார் *15* ஆயிரம் கால்நடைகள், இந்த மருந்தகத்திற்குத்தான் சிகிச்சைக்காக வருகின்றன. ஆகவே, போதிய இட வசதி இல்லாததால், நெய்தலூர் பொது மக்களே முயற்சி எடுத்து, சென்ற *4-4-2005* அன்று அந்த மருந்தகத்திற்காக சுமார் *50* சென்ட் நிலத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, பொது மக்கள் வாங்கிக் கொடுத்துள்ள அந்த இடத்தில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கான நிதியினை ஒதுக்கி, அங்கு கட்டடம் கட்டித் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுபோன்ற செயல்களுக்காகத்தான் நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த நிதியின்மூலமாக, மாண்புமிகு உறுப்பினர் அமைத்திட முன்வந்தால் உடனடியாக அதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலை கிராமத்திலே மூன்று ஊராட்சிகளும், *32* கிராமங்களும் இருக்கின்றன. அந்தப் பகுதி முழுவதும் மலைவாழ் மக்கள்தான் வாழ்கிறார்கள். அங்கு கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று, முன்னாள் அமைச்சர் அவர்களிடம் பலமுறை நான் இதுகுறித்து கேள்வி கேட்டு, அதற்கு அவர், "இந்த

ஆண்டு வழங்கப்படும்; இந்த ஆண்டு வழங்கப்படும்" என்று இந்தச் சட்டமன்றத்திலே உறுதியளித்தார்கள். இப்போது ஏலகிரி மலையிலிருந்து, 50 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள ஜவ்வாது மலைக்கு வாரத்திற்கு ஒரு முறை மொபைல் வேன்மூலமாக வருகிறார்கள். அந்தப் பகுதி மலைவாழ் மக்கள் தங்களின் துணை வருவாயாக ஆடு, மாடுகளை மேய்த்து அவர்களின் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். கால்நடைகளுக்கு நோய் வந்துவிட்டால், நிச்சயமாக அந்தக் கால்நடைகள் மடிந்துவிடுகின்றன. அதற்கான கருத்துருக்கள் அனைத்தும் நம்முடைய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. எனவே, மலைவாழ் மக்களின் நலன் கருதி, முன்னுரிமை அடிப்படையில், அந்தப் பகுதி மலைவாழ் மக்களுக்கு இந்த ஆண்டே கால்நடை மருத்துவமனையினைக் கட்டித் தர, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், என்னுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தக் கட்டடம் கட்டுவதற்கான நிதியைத் தருவதற்கு நானும் தயாராக இருக்கிறேன். எனவே, முன்னுரிமை அடிப்படையில் அதனை வழங்கிட, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியளித்திட முன்வந்தால், முன்னுரிமை அடிப்படையில் விரைவில் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

175—

கட்டடம்

***33785—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—